

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.2.2026) சென்னையில் நடைபெற்ற ராமசுந்தரம், (ஓய்வு) திருமதி அர்ச்சனா ராமசுந்தரம், (ஓய்வு) தம்பதியரின் மகன் பிரவீன் – ஜெனிஃபர் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (6.2.2026) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா சந்தித்து, வணிகர்களின் கட்டணமில்லா நலவாரிய உறுப்பினர் பதிவு சலுகை கால அவகாசத்தினை நீட்டித்து அளித்ததற்கும், அறநிலையத் துறை குடியிருப்புகளுக்கு வாடகை குறைத்தும் அறிவிப்புகளை வெளியிட்டதற்கு, நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு பொருளாளர் ஏ.எம். சதக்கத்துல்லா, மாநில கூடுதல் செயலாளர் வி.பி.மணி, ணி, வேலூர் மண்டலத் தலைவர் இரா.ப.ஞானவேல், வடக்கு மாவட்டத் தலைவர் ஏ.செல்வராஜ், வேலூர் மொத்த வாணிப எஸ்டேட் லிமிடெட் நிர்வாக இயக்குநர் கணேச அருணகிரி, இயக்குநர் ஆர்.ஜி.தர்மராஜ் மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.




சென்னை, அடையாறு மத்திய கைலாஷ் சாலை சந்திப்பில் அமைக்கப்பட்டுள்ள ‘L’ வடிவ இருவழிச்சாலை மேம்பாலத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேற்று (06.02.2026) நேரில் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், நெடுஞ்சாலைத் துறை திட்ட இயக்குநர் தெ.பாஸ்கர பாண்டியன், தலைமைப் பொறியாளர் (மெட்ரோ) எஸ்.ஜவஹர், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



காரியாபட்டி அருகே கல்குறிச்சியில் தி.மு.க. இளைஞரணி சார்பில் நடைபெற உள்ள தென் மண்டல மாநாட்டு ஏற்பாடுகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டார். உடன் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் பலர் உள்ளனர்

### மக்களவை தொடங்கிய சில நிமிடங்களிலேயே – நாள் முழுவதும் ஒத்திவைப்பு

# தொடர்ந்து 5வது நாளாக முடங்கியது நாடாளுமன்றம்!

### அவையின் மைய பகுதிக்குச் சென்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம்!

### மாநிலங்களவையிலும் ஒன்றிய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் முழக்கம்!

புதுடெல்லி, பிப். 7 -

சீன ஆக்கிரமிப்பு மற்றும் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக விவாதம் நடத்த அனுமதிக்கக் கோரி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை தொடங்கிய சில நிமிடங்களிலேயே நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

சீன ஆக்கிரமிப்பு மற்றும் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் குறித்த விவகாரம் நாடாளுமன்றத்தில் நேற்றும் எதிரொலித்தது. மக்களவையில் இந்த இரு விவகாரங்கள் தொடர்பாக விவாதம் நடத்த அனுமதிக்க வேண்டும் என சபாநாயகரிடம் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.

ஆனால், விவாதம் நடத்த அனுமதிக்க முடியாது என சபாநாயகர் பிடிவாதமாக தெரிவித்து விட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

மேலும், பதாகைகளை ஏந்தி அவையின் மைய பகுதிக்குச் சென்று போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதனால் அவையில் கடும் அமளி நிலவியது.

இதனையடுத்து, மக்களவை தொடங்கிய சில நிமிடங்களிலேயே நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் அவை கூடியபோதும் அமளி நீடித்ததால் மக்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

**மாநிலங்களவை**

இதேபோல், சீன ஆக்கிரமிப்பு மற்றும் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்த விவகாரம் மாநிலங்களவையிலும் எதிரொலித்தது. இந்த இரு விவகாரங்கள் தொடர்பாக விவாதம் நடத்த அனுமதிக்க முடியாது என மாநிலங்களவை தலைவர் தெரிவித்ததால், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

### மகாத்மா காந்தி பெயரை மாற்றியதற்கு எதிர்ப்பு!

# ‘வி பி ஜி ராம் ஜி’ சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்!

### ஒன்றிய அரசை வலியுறுத்தி – கேரள சட்டப்பேரவையில் தீர்மானம்!

திருவனந்தபுரம், பிப். 7 -

மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மாற்றாக ஒன்றிய அரசு நிறைவேற்றிய ‘வி பி ஜி ராம் ஜி’ சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி கேரள சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கேரள உள்ளாட்சித் துறை அமைச்சர் எம்.பி. ராஜேஷ், ‘வி பி ஜி ராம் ஜி’ சட்டத்தை திரும்பப் பெறக் கோரும் தீர்மானத்தை சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.

100 நாள் வேலைத் திட்டத்துக்கான நிதி முழுவதையும் ஒன்றிய அரசே வழங்கியதாகவும், ஆனால், ‘வி பி ஜி ராம் ஜி’ சட்டத்தின்கீழ் 40 சதவீதம் நிதியை மாநில அரசு அளிக்க வேண்டும் என்றும், இது மாநிலத்துக்கு நிதிச் சுமையை அதிகரிக்கும் என்றும் இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே அமலில் இருந்த 100 நாள் வேலைத் திட்டமே தொடர வேண்டும் அதில் வலியுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்திக்கு பின் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

‘வி பி ஜி ராம் ஜி’ சட்டத்துக்கு எதிராக ஏற்கெனவே தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் தெலங்கானா ஆகிய மாநிலங்களின் பேரவைகளில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### தொடர்வண்டி வழித்தடங்களில், தொடர்ந்து

# வன விலங்குகள் பலியாவதை தடுக்க ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் என்னென்ன?

### மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.7-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 04.2.2026 அன்று மக்களவையில், தொடர்வண்டி வழித்தடங்களில் யானை போன்ற வனவிலங்குகள் தொடர்ந்து பலியாவதை தடுக்க ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன? என்றும், கடந்த ஐந்தாண்டுகளில் இது வரை எவ்வளவு வன விலங்குகள் பலியாகியுள்ளன? என்றும், இதற்கான தடுப்பு நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ளுமா? என்றும் இதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் இரயில்வேத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.



ஒன்றிய அரசின் இரயில்வேத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:

இந்திய இரயில்வேத்; துறையும், சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் துறையும் இணைந்து செயல்பட்டு, யானைகள் பலியாவதையும், வன விலங்குகள் உயிரிழப்பைத் தடுக்கவும், தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்றும், செயற்கை நுண்ணறிவு முறையினை பயன்படுத்தி யானகைள் வருவதை முன் கூட்டியே கண்டறிய ஒலி உணர்வுக் கருவிகள் தொடர் வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ளன என்றும், தொடர் வண்டி ஓட்டுநர்கள், தொடர் வண்டி நிலைய அதிகாரிகள் மற்றும் கட்டுபாட்டு அறை ஆகிய மூன்று இடங்களிலும் யானைகளின் நடமாட்டத்தை முன் கூட்டியே அறிய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், வடகிழக்கு செயற்கை நுண்ணறிவு உதவியுடன் இயங்கும் ஊடுருவல் கண்டறியும் அமைப்பு, தொடர் வண்டித்துறையில் 1300 கிலோ மீட்டர்கள் அளவிற்கு செயல்பட்டு வருகின்றது என்று அமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

தொடர்வண்டி துறை அதிகாரிகளும், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அதிகாரிகளும் இணைந்து செயல்பட்டு வேகத்தடைகள் அமைக்கவும், ஓட்டுநர்களுக்குகான பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன என்றும், யானைகளுக்கான வழித்தடங்கள் தேவையான இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன என்றும் ஒவ்வொரு ஆண்டும் 16 யானை சார்ந்த விபத்துகள் இதுவரை கண்டறியப்பட்டுள்ளன என்றும், வேலிகள் அமைப்பது, சூரிய ஒளியுடன் இயங்கும் விளக்குகளை அமைத்தல், நிலைய அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல், ஒலி எழுப்பும் கருவிகள், ஒளிப்படக் கருவிகள் அமைத்தல் போன்ற பல்வேறு முயற்சிகளை அரசு எடுத்து வருகின்றது என ஒன்றிய அரசின் மாண்புமிகு இரயில்வேத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்கள் மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலளித்தார்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் கம்மராசபுரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார் அதனை தொடர்ந்து மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எமஎல்ஏ மக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார் உடன் ஒன்றிய செயலாளர் க. குமணன். ஊராட்சி மன்ற தலைவர்கள்.கீதா ராணி சங்கர்.டி.எல் தயாளன்.கோ கமலக்கண்ணன்.( பொறுப்பு),,வே. திருநாவுக்கரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

### சென்னை கிழக்கு மாவட்ட

# கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம்!

### மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்!

சென்னை, பிப். 7-

சென்னை கிழக்கு மாவட்டக்கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று (06.02.2026 வெள்ளிக்கிழமை), மாலை சென்னை, வில்லிவாக்கம், எம்.டி.எச். சாலை, டி.கே.ஏ.திருமண மண்டபத்தில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் சிறப்புரையாற்றினார்.



இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள்: ப. தாயகம்கவி, ஜோசப்சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: ப.ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, சி.மகேஷ்குமார், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், பரிதி இளம்சுருதி, வே. உமாகாந்தன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா,

மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.மகாதேவன், புனித வதி எத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: எம். சாமிக்கண்ணு, செ.தமிழ் வேந்தன், கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், டி. எஸ்.பி.ராஜகோபால், எம். டி.ஆர். நாகராஜ், சொ. வேலு. வி.சுதாகர், எஸ். முரளி, எஸ்.ராஜசேகர். தொகுதி பார்வையாளர்கள்: என்.கிருஷ்ணமூர்த்தி, இரா.நரேந்திரன், பி.முனியாண்டி, ஓ.ஏ.நாகலிங்கம். பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி. செம்மொழி, பி.ஜே.துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீல கண்டன், பி.உதயசங்கர், ஏ.பி. பூர்ணிமா, அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, நந்தீஸ்வரன், சுரேஷ். மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், க.வினோத், எஸ்.தனசேகர், எல்.பி. எஃப்.மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், P.விஜயகுமார், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு. கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி. பிரதீப்குமார், எல்.சம்பத் குமார், எம்.விநாயகம், து. ஆயிரம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர் ஜி.சாந்தகுமாரி, ஜி. வி.நாகவள்ளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் ஆர்.தீனதயாளன் நன்றி கூறினார்.

**தீர்மானங்கள்**

**தீர்மானம் 1:**

29/01/2026 வியாழக்கிழமையன்று திரு.வி.கநகர் தொகுதி, 74வது வட்டத்தில் புதியதாக கட்டப்பட்ட அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையை திறந்து வைத்து, 10 இணையர்களுக்கு சீர் வரிசையுடன் கூடிய இலவச திருமணத்தை நடத்தி வைத்தும், தொடர்ந்து துறைமுகம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள பூக்கடை பேருந்து நிலையத்தை புதுப் பொலிவுடன் நவீன வசதிகள் கொண்ட பல்நோக்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையமாக்கிட அதன் பணிகளை துவக்கி வைக்கவும் வருகைதந்து சிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம் 2:**

11/02/2026 புதன்கிழமை யன்று காஞ்சிபுரம் மாவட்டம் திருவிட ந்தையில் நடைபெறவுள்ள சென்னை- விழுப்புரம் மண்டலத்தி ற்குட்பட்ட BLA2, BLC, BDA, BYO ஆகியோருக்கான மாநாட்டில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளின் BLA 2, BLC, BDA, BYO ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ள உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.